அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:260/2015
தேதி :26.10.2015

# சீனப்பட்டாசு விற்பனையை தடைசெய்ய 42 தனிப்படைகள் - தமிழக அரசுக்கு சமக நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ பாராட்டு

சீனாவிலிருந்து பட்டாசுகள் பெரும் அளவில் மறைமுகமாக இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட உள்ளதை மத்திய மாநில அரசுகள் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்தக் கோரிக்கையை முன் வைத்து இன்று (26.10.2015) மதுரையில் பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் தமிழகத்தில் சீனப்பட்டாசு விற்பனையை முற்றிலும் தடுக்கும் விதமாக 42 தனிப்படைகள் அமைக்கப்பட்டு இருப்பதை பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழகம் முழுவதும் பட்டாசுக் கடைகளில் சீனப்பட்டாசுகள் கலந்து விற்கப்படுவதைக் கண்காணித்து தடைசெய்யவும், அவற்றைப் பதுக்கி வைத்து விற்பனை செய்யும் முயற்சியை முறியடித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் விதமாகவும் தனிப்படைகளை அமைத்து இருக்கும் தமிழக அரசுக்கு பட்டாசு தயாரிப்பாளர்கள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள், பட்டாசுத் தொழிலை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள் மற்றும் பொதுமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் விதமாக ஆண்டு முழுவதும் பட்டாசு விற்பனை நடந்து வந்தாலும், தீபாவளிப் பண்டிகையின் போதுதான் உச்சகட்டமாக பட்டாசு விற்பனை நடைபெற்று அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு போனஸ் உள்ளிட்ட பெரிய தொகை வருமானமாகக் கிடைக்கும். இந்நிலையில் சீனப்பட்டாசுகள் விற்பனை செய்யப்பட்டால் தமிழக பட்டாசு தொழிற்சாலை முதலாளிகள் மற்றும் வியாபாரிகளுக்கும் வருமானம் குறைந்து அதன் விளைவாக உழைப்பாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பெரிய அளவில் மன வருத்தத்தை ஏற்படுத்தி விடும்.

இதை நன்குணர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுத்திருப்பது அனைவரது வயிற்றிலும் பால்வார்க்கும் விதமாக அமைந்துள்ளது. அந்த வகையில் மனமார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் மனதாரப் பாராட்டுகிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார்
தலைவர்